IV.—GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That Demand No. X—Administration of Justice and Demand No. XI—Jails be taken up for discussion before Demand No. XXVII—Public Works (Works) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and plant and Demand No. XLII—Capital outlay on Public Works and that time allotted for Demands Nos. X and XI be reduced to one hour."

MR. SPEAKER : The question is :—

"That Demand No. X—Administration of Justice and Demand No. XI—Jails be taken up for discussion before Demand No. XXVII—Public Works (Works) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and plant and Demand No. XLII—Capital outlay on Public Works and that time allotted for Demands Nos. X and XI be reduced to one hour."

The motion was put and carried.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963–64 (*cont.*)

DEMAND X—ADMINISTRATION OF JUSTICE AND DEMAND XI—JAILS

THE HON. SRI M. BHAKTAVATSALAM : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice."

"That the Government be granted a sum not exceeding Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails"

SRI K. R. NALLASIVAM : I move the following cut motion :—

"That the allotment of Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice be reduced by Rs. 100".

SRI M. R. KRISHNAMOORTHI : Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, it has already been agreed that for both these Demands, the time-limit may be one hour. For the other Demand, viz., Public Works (Works) the time-limit may be three hours.

MR. SPEAKER : Very well, Sri A. P. Dharmalingam may now speak.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : *கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நீதியையும் தண்டனையையும் ஒன்றாகக் கலந்து விவாதிக்கின்ற நேரத்தில் எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி. நீதி ஏழை எளியவர்*

20th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

களுக்கும் கூட சுலபமான வகையில் அதிகச் செலவு இல்லாமல் கிடைக்க வழி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தண்டிக்கப்படுகிறவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்று சொல்லிவிட முடியாது. அதேபோல விடுதலை பெறுகின்ற அத்தனை பேர்களும் குற்றமற்றவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. பொதுவாக நியாயம் வேறு சட்டம் வேறு. சட்டத்தின் உதவியைப் பெற முடியாதவர்கள் பணச் செலவு செய்ய வசதி இல்லாதவர்கள் பல சமயங்களில் தங்கள் பேரில் அநியாயமாகச் சுமத்தப்பட்ட குற்றங்களில் இருந்து விடுதலை பெற முடியாது போவதைப் பார்க்கிறோம், பல பேர் வழக்குகளை நடத்த இயலாத நிலைமையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது இந்த மன்றத்தில் உள்ள பலருக்கும் தெரியும். எத்தனையோ நில பிரபுக்கள் விவசாயிகளின் மீது வழக்குத் தொடர்ந்து உயர்நீதி மன்றங்கள் வரை வருகிறார்கள். அவர்களுடைய கொடுமைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள பண வசதியின்றி, கோர்ட்டுகளில் வழக்காட இயலாது பல கொடுமைகளுக்கு விவசாயிகள் இன்றையதினம் உள்ளாகிறார்கள். பல சமயங்களில் வழக்காட வசதி இல்லாத நிலையினாலேயே அவர்கள் சொல்வதை ஒப்புக்கொண்டு கொடுப்பதை வாங்கிக்கொண்டு நீதியை விற்றுவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஏழை எளிய விவசாயிகள் ஹைகோர்ட் வரை வந்து தம் பக்கத்தில் உள்ள நியாயத்தை நிலைநாட்டிக்கொள்ள அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். வேறு பல வழக்குகளில் அரசாங்கமே வக்கீல்களை இலவசமாக நியமித்துக் கொடுப்பது போல இவர்களுக்கு வழக்கறிஞர்களின் உதவி கிடைக்க வழி செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பொதுவாக சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஒருவன் திருடன் என்று ஒரு முறை தண்டிக்கப்பட்டுவிட்டால் அப்புறம் அவன் ஆயுள் முழுவதும் போலீஸ் கண்காப்பிலேயே வைக்கப்படுவதும், வேறுபல வழக்குகளில் பொய்யாகக் குற்றஞ் சாட்டப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுவதும் மிக அநியாயமாக இருக்கிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குற்றம் செய்தவன் என்பதற்காக ஒருவன் சிறையில் தள்ளப்படுவானேயாகில் மீண்டும் வெளி வரும்போது சமுதாயத்தோடு சேர்ந்து பிழைக்க வழியில்லாதவனாக வரக்கூடாது. திரும்பும்போது வாழ்க்கையில் மறு மலர்ச்சி உடையவனாக, நல்ல பழக்கங்களில் உறுதிப்பாடு உடையவனாக, மீண்டும் குற்றம் செய்யாது சமுதாயத்தில் ஒருவனாக தொழில் செய்து பிழைக்கும் நிலையில் வெளிவரத்தக்க சூழ்நிலையை உண்டாக்கவேண்டும். சிறை அத்தகைய நற்பண்புகளை அவனிடம் ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையவேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சிறைக்குச் சென்று திரும்பியவர்களில் எத்தனையோ பேர்கள் நல்லவர்களாக, சமூகத்திற்கு அரும்பணியாற்றக்கூடிய சீர்திருத்தவாதிகளாக மாறியிருப்பதைப் பார்க்கிறோம். அரசியல்வாதிகள் மட்டும் அல்ல. வேறு பலரும் கூட இவ்வாறு ஒரு நல்ல தன்மை உடையவர்களாக மாற சிறைச்சாலை தக்க வழிவசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் புதுக் கைதியை பழையக் கைதிகளோடு சேர்க்கக்கூடாது. அவ்வாறு சேர்ப்பதனால் அந்தப் பழைய கைதிகளிடமுள்ள கெட்ட பழக்கங்களுக்கு இவன் ஆளாக நேரிடும்.

அதுபோலவே சிறையில் குறிப்பிட்ட சில மதத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அம் மதத்தைச் சேர்ந்த பாதிரிமார்கள் நல்ல நெறியைக் காட்ட அடிக்கடி சிறைக்கு வந்து சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். மற்ற மதத்தைச் சேர்ந்துள்ள கைதிகளுக்கு அவ்வசதி கிடையாது. அப்படிப்பட்ட வசதி கிறிஸ்துவர்களுக்கு ஞாயிறு, முகம்மதியர்களுக்கு வெள்ளி என்று வைத்துக்கொண்டிருப்பது போல இந்துக்களுக்கும் பல அறிஞர் பெருமக்களை சிறைக்கு அழைத்து நற்பண்புகளை சொற்பொழிவுகளின் மூலம் ஊட்டுவதற்கு—செய்யப்பட வேண்டும் என்று

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [20th March 1963

தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சிறையில் சீர்திருத்த நாடகங்களையும் சினிமாப் படங்களையும் அவர்களுக்குப் போட்டுக்காட்டலாம். இதனால் எல்லாம் அவர்கள் மனம் மாற்றம் அடைவதற்கும், அவர்கள் திருந்துவதற்கும் வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிற உணவு மிகமிக மோசமாக இருந்து வருகிறது. "எங்களுக்குத் தெரியாதா?" என்று நீங்கள் கேட்கலாம். இப்போது இருக்கிற சிறையில் கொடுக்கப்படுகிற உணவில் கற்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த உணவை உண்பதன் காரணமாகப் பல கெடுதல்கள் ஏற்படுகின்றன. சாமான்கள் கணக்கில் அதிகமாக எழுதப்பட்டிருந்தாலும், உணவு வழங்கப்படுகிற நேரத்தில் போதிய அளவு நல்ல முறையில் வழங்கப் படுவதில்லை. சிறைச்சாலைகளுக்குக் கைக்குத்தல் அரிசி கொடுக்கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி குடல் குத்தல் அரிசியாகத்தான் இருக்கிறதே தவிர, உண்பதற்கு ஏற்ற முறையில் இல்லை. திருச்சி சிறைச்சாலைக்கு வேண்டிய கைக்குத்தல் அரிசியை வேதாரண்யம் கைக்குத்தல் அரிசி சொசைடியிலிருந்து வாங்குகிறார்கள். பக்கத்தில் தஞ்சையில் திருச்சியில் மண்ணச்சநல்லூர் மார்க்கட்டில் அரிசி வாங்குவதை விட அதிக விலை கொடுத்து வேதாரண்யத்திலிருந்து கைக்குத்தல் அரிசி வாங்கப் படுகிறது. அதை விடக் குறைந்த விலைக்கு உயர்ந்த ரக அரிசியை மண்ணச்சநல்லூர் மார்க்கட்டில் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அப்படியிருந்தும் கூட்டுறவு முறைக்கும் ஆக்கம் தரவேண்டுமென்ற எண்ணத்தாலோ வேறு காரணத்தாலோ வேதாரண்யத்திலிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அறுவடைக் காலங்களில் நெல்லைக் கொள்முதல் செய்து வைத்துக்கொள்ளலாம் என்ற அதிகாரம் சில சிறைச்சாலைகளுக்கு இருக்கிறது. மதுரை,புதுக்கோட்டை போன்ற சிறைச்சாலைகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சி சிறைச்சாலையைப் பொறுத்த வரையிலுமாவது அந்த அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1961-62-லே கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் சிறைச்சாலைகளுக்கு சப்ளை செய்யப்பட்டதால் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது என்ற காரணத்தால், டெண்டர் பெறப்பட்டு கண்ட்ராக்டர்களுக்குக் ஒப்பந்த மூலம் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். அப்படி இருந்தும் இன்னும் சில சிறைச்சாலைகளுக்கு கூட்டுறவு சொசைடி மூலம் பண்டங்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். கோயம்புத்தூர் சிறையில் சில சாமான் மட்டும், எல்லாச் சாமான்களையும் அல்ல, கூட்டுறவு ஸ்தானபங்கள் வழங்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. தனிப்பட்ட ஒருவருக்காக அந்த சொசைடியிலிருந்து சில சாமான்களை வழங்க அனுமதி கொடுத்திருப்பது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து உடையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் கட்டம் போட்ட உடையும், குல்லாயும் கொடுக்கப்பட்டு வந்தன, நம்முடைய சுதந்திர சர்க்கார் வந்த பிறகு வெள்ளைக்கால் சட்டையும் அரைக் கை சட்டையும் கொடுக்கப்டுகிறது. வெள்ளைக் குல்லாயும் கொடுகிகப்படுகிறது. வெள்ளைக்காரனுக்கு அடிமையாக இருந்த காலத்தில் குல்லா கொடுத்தார்கள். இப்போது குல்லா அவசியமில்லை. உடையும் அவரவர்களுக்குப் பொருத்தமானபடி தைக்கப்படவில்லை. பருமனை ஆளுக்கும் ஒல்லியான ஆளுக்கும் ஒரே அளவு உடைதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, கொடுக்கப்படுகிற உடைகள் ஆட்களுக்குத் தகுந்த மாதிரி இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறைகளிலே பள்ளிக்கூடம் என்று ஒன்றிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்களா என்றால் இல்லை. சிறையில் இருந்தவர்கள் இன்னின்ன வகுப்பில் தேறினார்கள் என்ற கணக்கு முன்பு வந்தது. இப்போது வருவதில்லை. நான் சிறையில் இருந்தவரை பார்த்தேன். ஆசிரியர் இருக்கிறாரே தவிர அங்கு போய்ப் படிக்கிறவர்களை காணோம். மேலும் இடம் போதவில்லை என்பதால் அதை சிறையாக மாற்றிவிட்டார்கள். நல்ல இட வசதி செய்து கொடுத்து அவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார நிலைமை சிறைச்சாலைகளில் மிக மிக மோசமாக இருந்து வருகிறது. பொதுவாகக் கொசுத் தொல்லை மிகவும் அதிகம். கொசுவை அழிக்க மருந்து அடித்தால் ஈ வந்து விடுகிறது. சாக்கடை வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் மருத்துவ வசதிகளும் சரியானபடி இல்லை. யாராக இருந்தாலும் சரி, சிறைச்சாலையிலே ம்ரியாதை கொஞ்சம் கம்மிதான். அங்கு கொடுக்கப்படுகிற வைத்தியத்தை நினைத்துப் பார்க்கிறபோது வேதனையாகத்தான் இருக்கிறது. சிறைசசாலையில் நான் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். பெருமதிப்புக்குரிய நேரு அவர்கள் சிறைச்சாலை டாக்டரைப் பற்றி, அங்குள்ள கொடுமையைப் பற்றி எழுதியிருக்கிறார். ஒரு நாய்க்கு வைத்தியம் பண்ண சர்க்காருடைய விதிகளிலே "ப்ரொவிஷன்" இல்லையே என்று வேதனைப்பட்டு எழுதியிருக்கிறார். ஆனால் இப்போது சிறைச்சாலையிலே மனிதன் நாயைவிடக் கேவலாக மதிக்கப்படுகிறான். டாக்டர்கள் நோயுற்ற கைதிகளின் கையைத் தொட்டுப் பார்த்து, அவனுடைய உடல் நிலையைப் பரீட்சித்துப் பார்த்து மருந்து கொடுப்பதில்லை. எல்லோரையும் வரிசையாகக் கொண்டு போய் நிறுத்தி விடுவார்கள். கம்பிக்கு மறு பக்கம் இருந்து கொண்டு தொண்டையை வலிக்கிறது, வயிற்றை வலிக்கிறது என்று சொன்னால் ஏதோ ஒரு மருந்தைக் கொடுப்பார்கள். அதுவும் சிறைக் கைதியில் ஒருவரே கம்பவுண்டராக இருந்து மருந்து கொடுப்பார்கள். வயிற்று வலிக்கு கொடுத்த மருந்தைச் சாப்பிட்ட உடன் அவர்களுக்கு தலைவலி உண்டாக்கிவிடும். சமுதாயத்திலே ஒதுக்கப்பட்ட இனம் என்ற வகையிலே சிறைக் கைதிகள் நடத்தப்படுகிறார்கள். ஆகவே, நல்ல மருத்துவ வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கைதிகளுக்கு ஏதாவது குறைகள் இருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்ள செவ்வாய்க் கிழமை தோறும் சிறை அதிகாரிகள் டி. எம். ஓ. ஆகியோர் ரவுண்டு வருவார்கள். ஆனால் ஒருவரும் இருக்கக் கூடிய குறைகளைச் சொல்வதே இல்லை. யாராவது தப்பித் தவறி கையை உயர்த்தி குறைகளை பற்றிச் சொல்லி விட்டால் அந்த டி. எம். ஓ. போனவுடன் அவனுடைய கை அவனுக்குச் சொந்தமாக இருக்காது. இவை எல்லாம் மேலதிகாரிகள் கவனத்திற்கோ, அரசாங்கத்தின் கவனத்திற்கோ வருவதே இல்லை. அவர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதிலிருந்தும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். வெல்பேர் ஆபிசர் என்று ஜெயிலில் ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவருடைய வேலை என்னவென்று பார்த்தால் இண்டர்வியூ கண்டக்ட் பண்ணுவதுதான். கைதிகளுடைய வெல்பேரில் அவர் அக்கறை காட்டுவது கிடையாது. இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுககொள்கிறேன். 9–30 a.m.

ஆயுள் கைதிகளாக இருக்கிறவர்கள் நல்ல வேலை செய்து நல்லவர்கள் என்று பெயர் வாங்கினாலும் ஆயுள் பூராவும் சிறையிலேயே இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தண்டனையில் மூன்றில் இரண்டு பங்கைக் கழித்த பிறகு, தண்டனையை குறைப்பது பற்றிப் பரிசீலனை செய்ய போர்டு இருக்கிறது. லோகல் சப்-இன்ஸ்பெக்டர்களின் சிபாரிசின் பேரில் போர்டுக்கு சிபாரிசு பண்ணவேண்டுமென்று விதி இருக்கிறது. அந்த சப் இன்ஸ்பெக்டர் யார் யாரை விசாரிப்பது, எங்கெங்கு விசாரிப்பது, எப்படிப்பட்டவர்களை விசாரிப்பது \ என்பதைப் பற்றி தெளிவாக விதி இல்லை. அவர் ஸ்டேஷனுக்கு வந்து முன்னுலுள்ள ரிக்காடை பார்க்கிறார்கள். ஆனால் ஊரில் போய் விசாரிப்பதில்லை. முக்கியமானவர்களை விசாரிப்பதில்லை. அவர்களுக்குத் தோன்றியதை அனுப்புகிறார்கள். அவர் தண்டிக்கப்பட்ட காலத்தில் இருந்த இன்ஸ்பெக்டர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விடுகிறார் அல்லது உயர்ந்த உத்தியோகத்திற்கு போய் விடுகிறார். புதிதாக வந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் அப்போது பள்ளியில் படித்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஆகவே புதிதாக வருகிறவர்களைக் கேட்டால் பிரயோஜனமில்லை. அதோடு அவர்கள் சரியாக எழுதுவதும் இல்லை.

அப்படி எழுத வேண்டுமென்றால் வேறுவிதத்தில் கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கவனிப்பதற்கு ஏழைகளால் முடிவதில்லை, அவன் குற்றம் செய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள், அவர்களே ஏதோ ஆத்திரத்தால் செய்து விட்டால் என்று அவர்கள் விட்டு விட்டாலும் போர்டு அதைப் பாஸ் செய்வதில்லை. ஆகவே சப் இன்ஸ்பெக்டர் சிபார்சு செய்து அதனால் விட வேண்டுமென்று சொல்வதை மாற்றி நாம் ஜனநாயகத்தில் இருப்பதால் வேறு முறைகளை கொண்டுவந்து இன்னின்ன மாதிரி விசாரித்து செய்யலாம் என்று செய்தால் வசதியாக இருக்கும்.. அடுத்து, ஆயுள் கைதிகள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருக்கக்கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் வெளியே வர ஜமீன் கொடுக்கவேண்டும், அப்படி அவர்களுக்கு ஜாமின் கொடுக்க ஆள் இல்லாவிட்டால் அவர்கள் சிறையில்தான் இருக்கவேண்டியிருக்கிறது. அப்படியே அவர்கள் வெளியே வந்து சேர்ந்தாலும் சின்னத் தகராறுகளுக்காக அவர்களைப் பிடித்து மறுபடியும் ஜெயிலுக்கு அனுப்பி விடுகிறார்கள். இன்று ராமநாதபுரம் மாவட்டம், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 17 ஆண்டுகளாக இருக்கக் கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். ஆயுள் தண்டனை பெற்றவர்கள்தான் தண்டனைக்குரியவர்கள். ஆனால் பலயிடங்களில் அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. பிள்ளைகள் அல்லது மனைவி எந்த குற்றமும் செய்யவில்லை. அவர்களும் தண்டனையை அனுபவிக்கும் முறையில் இருக்கக்கூடாது. அந்த ஒரு ஆள்தான் அக்குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருப்பதின் காரணமாக, அவன் சிறை செல்வதால் அவன் அனுபவிக்கும் கொடுமையை விட வெளியே இருக்கும் அவன் குடும்பர்த்தா அதிகக் கொடுமையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கைதிகள் உள்ளே நல்ல வேலை செய்கிறார்கள். அதற்கு அவர்களுக்குப் போதிய கூலி கிடையாது. சாப்பாடு கொடுக்கப்படுகிறது என்று கூறலாம். ஆனால் அவர்கள் செய்கிற வேலையின் அளவிற்குக் கொடுப்பதில்லை. ஆகவே நான் சொல்வது வெளியில் இருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு சர்க்கார் ஒரு பாதுக்காப்பு அளிக்க வேண்டும். பிள்ளைகள் படிக்க வசதி செய்து தர வேண்டும். சிறையில் இருப்பவர்கள் குற்றம் புரிந்தாலும் வெளியே உள்ள, குற்றம் யாதும் செய்யாத அவர்கள் குடும்பத்தினர் தவிக்கும் நிலை மாற்றப்படவேண்டும். சிறைக்குள்ளே இந்தக் கைதிகள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். திருச்சி, மதுரை ஜெயிலில் பர்ணீச்சர் செக்ஷன், வீவிங் செக்ஷன் இவற்றில் அவர்கள் நன்கு வேலை புரிகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் கூலியின் ஒரு பகுதியை அவர்கள் குடும்பத்தினருக்குக் கொடுக்க வேண்டும். ப்ரொபேஷன் ஆபீசர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் சரியாக வேலை செய்வதில்லை. ஆகவே சிறையில் உள்ளவர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க சர்க்கார் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பரோலில் விடுவதை எடுத்துக்கொண்டால், வேண்டியவர்கள் என்றால் மூன்று நான்கு நாட்களுக்குள் கூட்டி வருகிறார்கள். அதுவும் ஆண்டுதோறும் வருகிறார்கள். ஆனால் பலருக்கு வருடக்காணக்காக பரோலில் வர முடியவில்லை. பரோலில், விட, எந்தக் குற்றத்திற்காக யார் தண்டனை வாங்கிக் கொடுத்தார்களோ அந்த இலாகாவினரைக் கேட்பது, முறையல்ல. அவர்களிடம் வேண்டியவர்கள் சொன்னால் விட்டு விடுகிறார்கள். இல்லாவிடில் மூன்று ஆண்டுகள் கூடப்போக முடிவதில்லை. தேர்தல் நேரத்தில் எங்கள் ஜெயிலிலிருந்து போய் விட்டு ஒருவர் இப்போது வந்து விட்டார். ஆயுள் தண்டனை பெற்றவர்கள், கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் கூட வருடந்தோறும் பரோலில் போய் வருகிறார்கள். ஆகவே எல்லாக் கைதிகளுக்கும் இந்த வசதி வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : கனம் அங்கத்தினர் அவர்கள் "எங்கள் ஜெயில்" என்று சொல்கிறார்களே, அவர்கள் ஜெயில் எங்கேயிருக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன்.

20th March 1963]

திரு. அ. பெ. தர்மலிங்கம் : 'எங்கள் ஜெயில்' என்ருல் எங்கள் மாவட்டத்திலுள்ள திருச்சி ஜெயிலேத்தான் கூறுகிறேன். மதுரை, தஞ்சாவூர், மற்றும் எங்கு தண்டிக்கப்பட்டாலும் திருச்சிக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. அடுத்து ஜெயிலில் 60 வயதிற்கு மேற்பட்ட கிழவர்கள் ரொம்பப்பேர்கள் இருக்கிருர்கள். அவர்கள் வெளியில் வந்து ஒன்றும் செய்ய முடியாது. 40 வயதில் தப்பு செய்து 60 வயதில் வெளியில் வந்தால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே அவர்கள் இறக்கும் போதாவது, வீட்டில் வந்து சாவதற்கு வேண்டிய வசதி வாய்ப்பு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சிறை வார்டர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதனுல் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. அதை இந்த மன்றத்தில் கூற நான் விரும்பவில்லே. அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக்கொடுத்தால் மற்றவர்களுக்கு நலமாயிருக்கும். ஆகவே அவர்கள் சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்பட்டு அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பு வசதி, மருத்துவ வசதி எல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்று கூறி இந்த அளவோடு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கிராமங்களில் முன்பெல்லாம் கிராம நீதிமன்றங்கள் என்று இருந்தன. இன்று ஓரளவு நாடு பூராவும், கிராமங்கள் பூராவும், அதிகாரங்கள் பிரித்துக்கொடுக்கும் நிலே இருப்பதால் இப்போது கிராமங்கள்தோறும் நீதி மன்றங்கள் ஏற்படுத்தினுல் நிச்சயமாக அவை பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே சர்க்கார் இதை ஆலோசித்து ஒரு ஜில்லாவிற்கு மூன்று நான்கு, கிராமங்கள் வீதம் கொடுத்து மாதிரியாகப் பார்த்து பின்னர் ராஜ்யம் பூராவிற்கும் விஸ்தரித்துக்கொள்ளலாம். இன்று நீதிமன்றங்கள் எப்படி இயங்குகின்றன என்று பார்த்தால், அன்னிய மொழியில்தான் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்றுதான் பார்க்கிருேம். இன்று நீதி பெறுகிற மக்களில் 98 சத விகிதத்தினருக்கு ஆங்கிலம் அடியோடு தெரியாது. நீதி வழங்குகிறவர்களும், நீதியை எடுத்துக் கூறுபவர்களும், நீதி பெறுகிறவர்களும், இந்த மூன்று சாராரும் தமிழை நன்கு அறிந்தவர்களாகத் தான் இருக்கிருர்கள். வேண்டுமானுல் உயர்நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகளில் சிலர் வெளி மாநிலத்தவராக இருக்கலாமே தவிர மீதியுள்ள "நீதிமன்றங்களில் இருப்பவர்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் அல்லது வேறு மொழி பேசுபவர்கள் வரக்கூடிய சூழ்நிலே இன்று இல்லே. இதை நாம் நினேவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியா அல்லது ஆங்கிலமா என்பதைப் பற்றிக் கவலேயில்லே. இன்று தமிழ் எல்லாத் துறைகளிலும் வர வேண்டுமென்று சொன்னபோதிலும் நீதித்துறையைப் பொறுத்தவரை தமிழ் அல்லாத வேறு மொழி இருப்பதினுல் பெரும் பாதகம் மக்களுக்கு ஏற்படுகிறது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நீதித் துறையில் உள்ள நடவடிக்கைகள் அநேகமாக ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி, முழுப் பயிற்சி இல்லாத காரணத்தினுல் நியாயத்தை எடுத்துச் சொல்கிறவர்கள் வகையில்லாது கஷ்டப்படுகிருர்கள். இன்று வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தில் முழுப் பயிற்சி இல்லாது தங்கள் உள்ளத்தில் எழுகிற உணர்ச்சியை, எண்ணங்களே எடுத்துச் சொல்ல முடியாதவர்களாக இருக்கிருர்கள். 100-க்கு 50 பேர்களும் இப்படி இருக்கிருர்கள், விவாதத்தின் பாற்பட்ட வார்த்தைகளே ஆங்கிலத்தில் முழுமையாக எடுத்துக் கூற முடியாமல். சில விஷயங்களில் எப்படி நம் தமிழக மாநிலம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறதோ அதேபோல் நீதித்துறையிலும் தமிழில் எல்லாவற்றையும் கவனிப்பது என்று வைத்தால் சிக்கல்கள் ஏற்படாது பிற மாநிலங்களுக்கு நாம் இதிலும் ஒரு வழிகாட்டியாக இருக்கமுடியும். இப்போது வழக்கறிஞர்கள் தங்கள் எண்ணங்கள் அல்லது உணர்ச்சிகளே வெளிப்படுத்த தமிழிலும் சொல்ல முடிவதில்லே, ஆங்கிலத்திலும் சொல்ல முடிவதில்லே. காரணம் மொழித் தகராறுதான். ஒன்று. ஆங்கிலத்திலேயே அவர்கள் தங்கள் கருத்துக்களேச் சொல்லவேண்டுமென்ருல் ஆங்கிலத்தில் ஆழ்ந்த பயிற்சி தேவை. அதற்கு அவர்கள்

[திரு. க. ர. நல்லசிவம்] [20th March 1963

வாழ்நாள் பூராவும் நீண்டுகொண்டு போகலாம். தமிழில் உள்ள சில வார்த்தைகளுக்கு ஆங்கிலத்தில் எதிர் வார்த்தைகள் கூற முடியாது. அதேபோல் ஆங்கிலத்தில் உள்ள சில வார்த்தைகளுக்கு தமிழில் எதிர் வார்த்தை கூற முடியாது. இதைச் சொல்லக் காரணம் ஒரு சில வழக்கறிஞர்கள், தமிழில் எப்படிக் கூறுவது என்று நினைக்கிறார்கள். மனம் இருந்தால் நிச்சயமாக வழியுண்டு. ஆகவே ஆங்கிலத்தை அகற்றி விட்டுத் தமிழை இத்துறைக்குக் கொண்டுவருவது என்று முடிவு செய்து விட்டால் காரியங்கள் தானாக நடக்கும்.

இன்னொன்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானத் துறையில் ஆங்கிலம் இல்லாவிட்டால் நாம் முன்னேற முடியாது என்று சொல்லப்படுகிறது. அதற்கு வேண்டுமானால் ஆங்கிலத்தை இரண்டாவது, மூன்றாவது பட்சமாக வைத்துக்கொள்ளலாம். நீதித் துறையைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்தலாம். நான் முன்பே பேசியிருக்க வேண்டிய விஷயம், சட்ட சபையில் வரக் கூடிய சட்டங்களெல்லாம் ஆங்கிலத்தில் வருகின்றன. இங்கே உள்ளவர்களில் எவ்வளவு பேர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்பதை நம்மைப் பற்றிய விவரம் உள்ள புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியும். இங்கே சட்டம் இயற்றப்பட்ட பிறகு வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் நீதியை வழங்க அதைப் பயன்படுத்துகிறார்கள். இருக்கக்கூடிய சிக்கலை அனுபவ பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டும். எதற்கெல்லாமோ மாகாத்மா காந்தியடிகளின் பெயரைப் பயன்படுத்துகிறோம். மாகாத்மா காந்தியடிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோம். நாட்டுமொழி தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், நாட்டு மொழி தான் சட்ட சபையில் இருக்க வேண்டும், கோர்ட்டுகளில் இருக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னவைகளை ஆயிரம் வகைகளில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோமே தவிர மொழியைப் பற்றி ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அதற்காக நாம் ஆயிரம் காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நான் நேரடியாகச் சொல்ல விரும்புகிறேன், பெருமையாகச் சொல்ல விரும்புகிறேன், எவ்வளவோ பேர்கள் ஆங்கிலம் தெரியாதவர்கள் இருந்து காரியங்களை ஒழுங்காகச் செய்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப்படி இருந்தும் இன்னும் இதைத் துவக்கவில்லை. ஒரே ஆண்டிலே தமிழைக் கோர்ட் மொழியாக ஆக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இரண்டு ஆண்டு, நான்கு ஆண்டு, ஐந்து ஆண்டு என்று திட்டமிட்டு, இத்தனை ஆண்டுகளில் தமிழில் வந்து விடும் என்று சொல்லக் கூடிய துணிவு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலை பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். வேறு ராஜ்யங்களில் இருக்கின்ற வசதிகளை நம் கைதிகளுக்கும் செய்ய வேண்டும். வேறு ராஜயங்களில் உள்ள ஜென்மக்கைதிகளுக்கும், அதிக கால தண்டனை அடைந்த கைதிகளுக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த முறையில் சம்பளம் கொடுத்தால் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றப் பயன்படும். குறைந்த சம்பளமாக இருந்தால், சில ராஜ்யங்களில் உள்ளேயே கடை வசதி செய்து அங்கேயே டீ குடித்துக்கொள்ளலாம், வேறு சாமான்கள் வாங்கிக்கொள்ளலாம். அந்த மாதிரி வசதிகள் இருக்கின்றன. உள்ளபடியே சிறைச்சாலை விஷயத்தில் இப்போது மாற்றங்களைச் செய்திருக்கிறோம். அதோடு இன்னும் சில மாற்றங்கள் செய்தால் பயனுள்ளதாக இருக்கும்.

கல்வித் துறையில் ஒரு சிலருக்குத் தான் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது மற்றவர்களுக்கும் கல்வி வசதி கிடைக்க முடியாத அளவுக்கு சூழ்நிலையும் அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகளாலும் செய்யப்படுகிறது.

பரோல் பற்றிச் சொன்னார்கள். ஜென்மக் கைதிகள் இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லோருமே வருவதற்கான முறையை ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

20th March 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

அதோடு ஜென்மக் கைதிகளை பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் அவர்கள் ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்கள். ஒழுங்காக இருக்கக் கூடிய ஜென்மக் கைதிகளை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். நான் கூட எனது நண்பர்களுக்கெல்லாம் எழுதினேன், அவர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்வதாகச் சொன்னால் சேர்ந்துவிடுங்கள் என்று. எனக்குச் சில நண்பர்களும் எழுதியுள்ளார்கள், சேர்த்துக்கொள்ளத் தயாராக இருந்தால் நாங்கள் சேர்கிறோம் என்று. இதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, அவர்களுக்குக் கஞ்சி கொடுக்கிறார்கள். அதை வேறு உருவமாக, தோசையாக, கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. கொடுக்கக்கூடிய கஞ்சி சுத்தமாக இருப்பது கிடையாது. ஆகையால் சுத்தமான கஞ்சியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நீதி நிர்வாகம், சிறைச்சாலை மான்யக் கோரிக்கைகளை அனுசரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் நீதித் துறையிலே எல்லாமே தமிழிலே இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது சட்டங்களெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. சட்டத்தை ஆங்கிலத்தில் செய்வது தான் சுலபமாக இருக்கிறது. அதோடு இல்லாமல் ஜட்ஜ்மெண்ட்டுகள் அலகாபாத், ஒரிஸ்ஸா, பெங்கால், கல்கத்தா போன்றவைகள் கூட ஆங்கிலத்தில் இருப்பதால், இப்போது அவ்வளவு சீக்கிரமாக மொழி பெயர்த்துச் செய்ய முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நம் மாநிலத்தில் ஹைகோர்ட் ஒன்று இருக்கின்றது. அங்கே அப்பீல்களெல்லாம் தாக்கலாகிச் செவ்வனே முடிவு பெற்று வருகின்றன. இருந்தாலும் அப்பீல்களைச் சீக்கிரமாகப் பைசல் செய்ய திருச்சியில் அல்லது மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நீதி நிர்வாகத் துறையில் நம் மாநிலம் முன்னேறி வருகிறது. ஹைகோர்ட்டோடு அல்லாமல் மாவட்டங்கள் தோறும் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகள், தாலூகாதோறும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் இயங்கி வருகின்றன. க்ரிமினல் குற்றவாளிகளை விசாரிப்பதற்காக மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் எல்லா ஜில்லா, தாலூகா தலைநகரங்களிலும் இருக்கின்றன. கோர்ட் கட்டடங்கள் பழமையாக இருக்கின்றன. அவைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சில ஊர்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் கட்டட வசதி இல்லாமல் தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இருந்துக்கொண்டிருக்கின்றன. அது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு கோர்ட்டிலும் வழக்கறிஞர்கள் தங்க பார் ரூம் இல்லாமல் இருக்கின்றது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருக்கும் கோர்ட்டுகளில் நாற்காலிகள், மேஜைகள் எல்லாம் பழமையாக இருக்கின்றன. அவைகளைப் புதிதாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளில் வழங்கப்படுகிற ஃபாரங்கள், ரிஜிஸ்டர்கள் முதலிய பேப்பர் எல்லாம் நல்ல முறையில் இல்லை. நிப் குத்தி பொத்துக்கொள்கிறது. ஆகையால் நல்ல ஸ்டேஷனரி கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். செக்ஷன் 145-ன்படி விசாரிக்கிறதில் ஆர்.டி.ஓ வுக்கு மனுச் செய்து, அவர்கள் போலீஸ் இலாகாவுக்கு அனுப்பி

போலீஸ் இலாகாவிலிருந்து ஆர்.டி.ஓ.வுக்கு அனுப்பி அங்கிருந்து எஸ்.டி.எம்.க்கு அனுப்பப்படுகிறது. இது கஷ்டமாக இருக்கிறது. ஆர்.டி.ஓ. போஸ்ட் ஆஃபீஸ் மாதிரி கருதப்படுறதே தவிர நீதி வழங்கப்படவில்லை. ஒன்று, ஆர். டி. ஓ. விசாரித்து முடிவு செய்ய வேண்டும். இல்லை என்றால், எஸ். டி. எம். -ல் கொடுத்து, அவர்கள் போலீஸ் டிபார்ட் மெண்டுக்கு எண்டார்ஸ் செய்து அனுப்பி அவர்களிடமிருந்து ரிப்போர்ட்டைப் பெற்று அந்த இடத்தில் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட, ஆர்.டி.ஓ.க்களுக்கு சில ஆஃபீஸ்கள் புதிதாக ஏற் படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதிகளே இல் லாமல் இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு தாலூகாவில் இருக்கும் வழக்காடுகிறவர் கள் மற்ற தாலூகா, டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. விருத்தாசலம் தாலூகாவில் இருக்கிறவர்கள் கள்ளக்குறிச்சி டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்தந்த ரெவின்யூ இலாகாவில் டி. எம். கோர்ட்டில் விசாரிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த காப்பீஸ் எழுதுவதில் கோர்ட்டுகளில் சரியாக எழுதப்படவில்லை. அது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. டைப்ரைட் டர் வைத்து டைப் அடித்துக் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும். அல்லது நல்ல கையெழுத்து எழுதுகிறவர்களாக வைத்து எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த சப்-கோர்ட்டுகள் இரண்டும் அநேகமாக எங்கள் மாவட் டத்தைப் பொறுத்தவரையில் தென் ஆற்காட்டில் கடலூரில் இருக்கின்றன. ஒன்றைப் பிரித்து விருத்தாசலத்தில் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.

அதோடு, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் எல்லாம் விருத்தாசலம் தாலூகா வில் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஏற்கெனவே திட்டகுடியில் இருந்தது, ரெவின்யூ இலாகாவில் இருந்தபோது, திட்டகுடியில் ஏற்படுத்த முடி யாவிட்டாலும், மாதத்திற்கு **2** முறை அல்லது **3** முறை விருத்தாசலத் திற்கு சப்-மாஜிஸ்ட்ரேட் சென்று விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த டெபுடி தாசில்தார், லோன் தாசில்தார் க்ரி மினல் வழக்குகளை விசாரிக்க அனுமதி கொடுக்கிறார்கள். அதிலே தாமதம் ஆகிறது. ஆகையால் சப்-மாஜிஸ்ட்ரேட்டே விசாரிக்க வழி வகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலை பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏழைக்கும் பணக்காரருக்கும் சமமான நிலையில் நீதி வழங்கப்படுகிறது. குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவும், மறு முறை குற்றங்கள் செய்யாமல் சீர்திருத்தம் செய்யவும்தான் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஏற்கெனவே இருந்ததைவிட நம் காங்கிரஸ் அர சாட்சி ஏற்பட்ட பிறகு, சுதந்திரம் ஏற்பட்ட பிறகு, கைதிகளுக்கு நல்ல வசதிகள் கொடுத்திருக்கிறார்கள். நல்ல சாப்பாடு கிடைக்கிறது. நல்ல சாப் பாடும், நல்ல வசதிகளும் இருப்பதால் வெளியில் இருப்பதைவிட உள்ளே இருப்பது நலமாக இருக்கிறது என்று மறுபடியும் குற்றம் செய்ய முன் வருகிறார்கள் என்று நினைக்கிறேன். சாப்பாடு வசதியைக் குறைத்தால் கூடத் தேவலை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளில் இருப்பவர்களின் குடும்பங்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று ஒரு நண்பர் பேசினார். இதைப்போல் வசதி செய்துகொடுத்துக்கொண்டே இருந்தால் '' நாம் ஒருவர் சிறைச்சாலைக்குச் சென்றால் பரவாயில்லை, நம்முடைய குடும்பத்தை அர சாங்கம் காப்பாற்றும் என்று நினைத்து, மறுபடியும் குற்றம் செய்து

20th March 1963] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

கொண்டே இருப்பார்கள். ஆகவே, அம்மாதிரி வசதி செய்து தரக் கூடாது என்று நினைக்கிறேன். மொபசலில் சப் ஜெயில் சூபரிண்டெண்டாக டெப்யூடி தாசில்தாரைப் போட்டிருக்கிறார்கள். இதனால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த வேலையையும் சப்-மாஜிஸ்டிரேட்டிடமே கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும். சில சமயங்களில் கைதிகள் வீட்டிற்கு லெட்டர் எழுதவேண்டுமென்றால் கோர்ட்டிலேதான் சப்—மாஜிஸ்டிரேட்டிடம் கார்டு கேட்கவேண்டியிருக்கிறது. டெப்யூடி தாசில்தாரைக் கேட்க முடிவதில்லை. அதே மாதிரிதான் கைதிகளுடைய குடும்பத்தினர்கள் கைதிகளைப் பார்க்க அனுமதி வேண்டுமென்றால், டெப்யூடி தாசில்தாரைப் பார்த்து அனுமதி வாங்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், டெப்யூடி தாசில்தார் " காம்ப் " போய்விடுகிறார். ஆகவே, இந்த வேலையை சப்—மாஜிஸ்டிரேட்டிடமே ஒப்படைத்து விட்டால், கைதிகளுக்கு நலமாக இருக்கும்.

ஜெயில்களில் நல்ல சாப்பாட்டு வசதி இருப்பதினால், கைதிகள் தேகத்தில் முறுக்கு ஏறி கம்பிகளைக்கூட உடைத்துவிடுகிறார்கள். ஆகவே, ஜெயில்களிலுள்ள கம்பிகள் சரியாக இருக்கின்றனவா என்று அவ்வப்பொழுது பார்த்துச் சரி செய்யவேண்டும்.

சிறு பிள்ளைகள் குற்றம் செய்தால் அவர்களைச் சீர்திருத்துவதற்கு வேண்டி பள்ளிகளை அமைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறார்கள். அதுவும் பாராட்டுக்குரியது. இந்த இரண்டு மான்யங்களையும் நான் முழுமனதுடன் ஆதரித்து, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் நாம் கைதிகளைப் பழிவாங்கும் எண்ணத்தைக் கைக்கொள்ளக் கூடாது என்பதைப் பண்பட்ட அரசியல்வாதிகள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வார்கள். சிறைச்சாலைகளில் கைதிகள் பழிவாங்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி எந்த அரசாங்கத்திற்கும் இருக்கக் கூடாது என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, கைதிகளுக்கு எப்பொழுது விலங்கு பூட்டப்படவேண்டுமென்பது பற்றி விதிகள் தெளிவாகக் கூறுகின்றன. அந்த விதிகளை மாற்றி அமைக்கக் கூடிய முறையில், சட்டத்திற்குப் புறம்பான முறையில், கைதிகளுக்கு விலங்கு போடக்கூடிய சூழ்நிலை நம்முடைய அரசாங்கத்தில் இருக்கிறது என்பது மிகவும் வருத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலையாகும். காந்தி அடிகளுக்கு விலங்கு போடப்பட்ட பொழுது, சிறைச்சாலை அதிகாரி அவரைப் பார்த்து "நீங்கள் வெட்கப்படுவீர்கள், விலங்கை மறைப்பதற்கு ஒரு புத்தகத்தைத் தருகிறேன். அதை வைத்து மறைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியதாக அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலே காணப்படுகிறது. அண்மையிலே நமது உயர்நீதி மன்றம் எப்பொழுது விலங்கு பூட்டப்படவேண்டும் என்பது பற்றி தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறது. "**There was no authority to impose any fetters on a prisoner unless he was a refractory, violent or dangerous prisoner**" இதைப்பற்றி **462**-வது விதி, நமது மாமன்றத்திலே செய்யப்பட்ட விதிகளில் ஒன்றாக அமைந்து கிடக்கிறது. அதை மாற்றி, அந்த விதிக்கு புறம்பாக ஒருவருக்கு விலங்கு பூட்டப்படுகிறது என்றால், அரசாங்கத்திற்குப் பழி வாங்குகிற உணர்ச்சி இருக்கிறது என்ற கருத்துதான் மக்களிடையே ஏற்படும். உதாரணமாக, தலைவர் அவர்களே, நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கும் நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இது போன்று பலாத்காரத்தைத் தூண்டக்கூடியவரா ? இதை அரசாங்கம் பரிசீலனை செய்துபார்க்க வேண்டும். அவரை விலங்கிட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூடிய செயல் இந்த அரசாங்கத்தில் நடைபெற்றிருக்கிறது என்றால், அது எவ்வளவு தூரம் வருத்தப்படக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசியலில் பழிவாங்கும் உணர்ச்சி என்று நான் சொல்லுவதைவிட, இது போன்ற முறையை அதிகாரிகள் கைக்கொள்ளாதபடி அரசாங்கம் மிகவும் கவனித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோல சிறைச்சாலைக்கு உள்ளே செல்லுகிறவர்கள் மீண்டும் உயிரோடு திரும்புவார்களா என்று சந்தேகப்படக்கூடிய அளவில் தான் சிறைச்சாலைகளுக்குள் சுகாதாரம் பேணிக் காக்கப்படுகிறது. **1930**-ல் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள், 'ஒரு நாள் காலை நான் ஜெயிலில் எழுந்திருந்து பார்த்தபொழுது ஒரு பெரிய க்யூ வரிசை நின்றுகொண்டிருந்தது. அந்த க்யூவில் நானும் போய் நின்றுகொண்டு லெட்ரினுக்குப் போகக்கூடிய சூழ்நிலை இருந்தது' என்று பிரிடிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின்போது இருந்த நிலைமையைக் குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆனுல், **30** வருஷங்கள் சென்றபிறகு, **15** ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி இந்த நாட்டில் ஆண்டதற்குப் பின்னுலே, **1962**-ம் ஆண்டு ஜூலை மாதம் **20**-ம் தேதி நானும் அதே காட்சியைத் தான் சிறைச்சாலையிலே காணக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனுல் சிறைச்சாலைகளில் எந்த அளவுக்கு சுகாதாரம் பேணிக் காக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். சிறைச்சாலைகளுக்குச் சென்றவர்கள் மீண்டும் உயிரோடு திரும்பிவரவேண்டுமென்ற ஒரு கொள்கை நிச்சயம் அரசாங்கத்திற்கு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு மாருக, சிறைச்சாலைகளில் சுகாதார வசதி மிகவும் குறைவாக இருப்பதை நம்முடைய அரசாங்கம் நன்ருகக் கவனிக்கவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறைச்சாலைகளில எப்படிப்பட்ட நிலைமையில் சுகாதார வசதிகள் பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளில் ஒரு விதியாவது சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம்தான். மதுரை, திருச்சி சிறைச்சாலைகளைப் பொறுத்த அளவில் நான் உறுதியாகச் சொல்லுவேன். அங்கெல்லாம் விதிகள் புறக்கணிக்கப்பட்டு சுகாதார வசதிகள் நிச்சயம் சரிவரச் செய்யப்படவில்லை என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ளுவேன். விதி செய்துவிட்டால் மட்டும் போதாது. அந்த விதிகளைப் பின்பற்றி சிறைச்சாலைகளில் நல்ல முறையில் சுகாதார வசதிகளைச் செய்துதர அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1956-ல் இந்த மன்றத்தில் செய்திருக்கிற விதியின்படி ஒரு கைதிக்கு **62** நயா பைசா மதிப்புள்ள உணவு தரப்படவேண்டும். இந்த விதி இந்த மன்றத்திஞல் இயற்றப்பட்ட போதிலும், ஒரு நாளைக்கு ஒரு தனி மனிதனுக்கு இன்றைய சூழ்நிலையில் **62** நயா பைசா சாப்பாடு எப்படிப்போதும் என்பதைக் கொஞ்சம் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிறைச்சாலைகளில் உள்ள குறைகளைப் பற்றி இந்த மாமன்றத்திலுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும், சிறைச்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள குறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும், அதற்கு வேண்டிய வசதிகளை நமது அரசாங்கம் செய்துதர வேண்டும் என்று கேட்கப்பட்டபொழுது, **1954**-ல் காங்கிரஸ் கட்சி சார்பிலே, இந்த சட்ட மன்றத்திலேயுள்ள எந்த சட்ட மன்ற உறுப்பினர் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிடவேண்டுமென்று விரும்பிஞலும் உடனே அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று அன்று இருந்த ஜெயில் நிர்வாக அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிருர். ஆனுல், இந்த அரசாங்கத்திற்கு நான் அது பற்றி எழுதியபோது, "சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட அனுமதிக்க மாட்டோம்", என்று இந்த அரசாங்கம் எனக்குப் பதில் அனுப்பியிருக்கிறது. இந்த அரசாங்கம் கொடுத்த உறுதியை இதே அரசாங்கம் மாற்றி அமைக்கக்கூடிய சூழ்நிலை இந்த ஆட்சியிலே இருக்கிறது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில், நீதி எளியவர்களுக்கு மிகக் குறைந்த செலவில் கிடைக்கக் கூடிய ஒரு நிலை இன்றைய ஜனநாயக ஆட்சியில் இருக்கிறதா என்று நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ரிட் மனுக்களை உயர் நீதிமன்றத்தில்தான் கொடுக்க முடியும். பெரும்பாலான இன்றைய சட்டங்களைப் பொறுத்தவரையில் ரிட் மனுக்கள் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவி வருகிறது. அப்படி இருக்கும்பொழுது ரிட் மனுக்கள்

20th March 1963] [திரு. எஸ். மாதவன்]

சென்னைக்கு வந்துதான் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை மாற்றி அமைக்கவேண்டும். மதுரையில் உயர் நீதி மன்ற பெஞ்ச் ஒன்று அமைக்கக் கூடிய முறையிலே இந்த அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில் உயர் நீதி மன்றத்திற்கு நீதிபதிகள் எங்கேயிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதை இது வரையில் அரசாங்கம் பரிசீலித்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இதுவரையிலே சென்னையில் தொழில்செய்யும் வழக்கறிஞர்களைத்தான் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கும் முறை இந்த நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தில் வேறு பகுதியிலுள்ள வழக்கறிஞர்கள் திறமையற்றவர்கள் என்று அரசாங்கம் கருதுகிறார்களா ? அவர்களுக்கு வாய்ப்பு தரக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா ? எந்த நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றினார்களோ அதே நீதிமன்றத்தில் அவர்கள் நீதிபதிகளாக வேலை செய்யக் கூடிய ஒரு சூழ்நிலையைத்தான் உண்டாக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ? மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு அம்மாதிரி வாய்ப்பு கொடுப்பதற்கு என் தயங்கவேண்டும் ? அதற்காக இந்த அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். இந்தக் கருத்தை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்து, வலியுறுத்தி அமுல் நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நீதிமன்றங்கள் விரைவிலே வழக்குகளை முடிப்பதற்கு அரசாங்கம் என்ன ஆலோசனை எடுத்திருக்கிறது ? இதுபற்றி ஏற்கனவே பல முறை இந்த சட்ட மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "டிலேய்ட் ஜஸ்டிஸ் இஸ் நோ ஜஸ்டிஸ்" என்பது தெளிவாக ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மை. நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏறி இறங்கிப் பல ஆண்டுகள் கழித்துத்தான் நீதி பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவி வருகிறது. அதை மாற்றியமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல ஆண்டுகளுக்குப் பின்னால்தான் ஒரு சிறிய தகராறைத் தீர்த்துவைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சாதாரண கீழ்க்கோர்ட்டுகளில் கூட அந்த நிலை இருக்கிறது. 10-00 a.m. அதை மாற்றி அமைக்க, மிக விரைவிலே ஏழைகளுக்கு நீதி கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். காங்கிரஸ் ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, ஏழை மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். அதற்காக இலவசமான முறையிலே சர்க்காரிலே வழக்கறிஞர்களை அமர்த்தித்தர வேண்டும் என்ற ஒரு கொள்கை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்ற ஒரு கருத்து பரவலாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்தக் கருத்தை அமுல் நடத்துவதற்கு இதுவரையில் இந்த அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ? நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரோடெக்ஷன் சட்டத்தை விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே உருவாக்கியிருக்கிறோம். ஆனால், நடைமுறையில் பார்க்கும்பொழுது, விவசாயிகள் நீதி மன்றத்திற்குப்போக முடியாத சூழ்நிலையிலே, அந்த நிலச்சுவான்தார்கள் விவசாயிகளைப் பழி வாங்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. இந்த சட்டத்தின் கீழ் நீதி மன்றங்களிலே உழவர்களின் சார்பாக வழக்காடுவதற்கு, அரசாங்கமே வழக்கறிஞர்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல, நீதி பரிபாலனம், அதோடு சிறைகள் பரிபாலனம், இவை இரண்டையும் சேர்த்து இங்கே விவாதம் நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. நீதி வழங்குவதற்காகத்தான் சிறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தண்டிக்கப்பட்டவர்கள் சிறையிலே வைக்கப்படுகிறார்கள். சிறைக

[திரு. எம். பக்தவத்சலம்] [20th March 1963

ளில் இருக்கிற வசதியைப் பற்றியும், சிறைகளில் இருக்கிற குறைகளைப் பற்றியும், கனம் அங்கத்தினர்கள் அவரவர்களுடைய அனுபவத்தைக் கொண்டு குறிப்பிட்டார்கள். இப்பேர்ப்பட்ட அனுபவம் நல்லதுதான். அவசியம் என்று நான் சொல்ல மாட்டேன். இந்த அனுபவம் வரவேற்கத் தக்கது. அதைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நேராக எல்லாவற்றையும் தெரிந்துகொண்டால்தான் நல்லது. ஆதி சங்கரர் கூட பல அனுபவங்களைப் பெறுவதற்காகத் தன் உடலை மாற்றிக்கொண்டு வேறு உடலிலே புகுந்து அந்த அனுபவத்தைப் பெற்றுர்கள் என்று கூறுவதுண்டு. இப்படி சிறையிலே இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது ஒரு விதத்தில் நல்லது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த விவாதத்திலே சிறைவாச அனுபவம் உள்ள சில கனம் அங்கத்தினர்கள் பேசினுர்கள். இந்த மன்றத்திலே சில வழக்கறிஞர்கள் இருப்பது பெருமை அளிக்கக் கூடியது. அவர்கள் கோர்ட்டு விஷயங்களைக் பற்றிப் பேசினுர்கள். மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பதில்லை. கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் ஒரு வழக்கறிஞர். நீதி வழங்குவதைப் பற்றிப் பேசினுர்கள். சிறையைப்பற்றி அவருக்குப் போதிய அனுபவம் இல்லை. குறைந்த அனுபவம்தான் (சிரிப்பு) மத்திய சிறையில் போய்க் கொஞ்ச நாட்கள் இருந்து பார்க்கும் நிலைமை ஏற்படவில்லை (சிரிப்பு).

திரு. அ. பெ. தர்மலிங்கம் : மத்திய சிறையில் ஒரு மாதம் இருந்திருக்கிருர்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அண்டர் ட்ரயலாக இருந்தமுறையிலே. தீர்ப்பு அளிக்கப்பட்டபோது விடுவிக்கப்பட்டார்கள். நான் கோர்ட்டை குறை கூறவில்லை. தண்டனை அடைந்த பிறகு இரண்டு, மூன்று மாதங்கள் சிறையில் இருந்தால் நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கும். (சிரிப்பு) இப்பொழுது சிலர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களைப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. சிறை பரிபாலனத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நீண்ட காலமாகவே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்போதைக்கப்போது பல குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் பரிசீலனை செய்து, சில சிபாரிசுகளைச் செய்திருக்கிருர்கள். சமீபத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குழு இந்த ஆட்சியினுல் அமைக்கப்பட்டது. நீதிபதியாக இருந்த ஒருவர் அடங்கிய குழு நன்ருக ஆராய்ந்து பல சிபாரிசுகளைச் செய்திருக்கிருர்கள். அவைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அமுல் நடத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறையிலே இருப்பவர்களுக்கு வசதிகள் போதவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தாங்கள் நேராகக் கண்டதையோ, அல்லது கைதிகளிடமிருந்து கேட்டதையோ பற்றிக் குறிப்பிட்டார்கள். நேராகக் கண்டது என்று சொன்னுல், அதற்கு நீண்ட கால அனுபவம் வேண்டும். ஆகவே, அங்கே இருக்கிற கைதிகள் சொன்னதை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிருர்கள். சிறையிலே இருப்பதற்கு யாருக்கும் விருப்பம் இருக்காது. அது கொடுக்க வேண்டும், இது கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள். குற்றம் செய்து விடுகிருர்களே தவிர, அதற்குப் பிறகு எவ்வாறு தப்பித்துக் கொள்ளுவது என்றுதான் பார்க்கிருர்கள். சிறைக்குச் சென்று விட்டால், எப்பொழுது வெளியிலே வர முடியும் என்றுதான் பார்க்கிருர்கள்.

ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டவர்களுக்குத் தாராளமாக ரெமிஷன் கொடுத்து, அவர்களை வெளியிலே அனுப்புவதில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு அட்வைசரி போர்டு இருக்கிறது. போலீஸார் சொல்லுவதை மாத்திரம் கேட்கவில்லை. போலீஸார் சொல்லுவதையும் கேட்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியும். ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்ட ஒருவருக்கு ரெமிஷன் கொடுத்து, அவர் வெளியிலே போய், மறுபடியும் ஒரு கொலை செய்ய நேர்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். சில

20th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

சமயங்களிலே, முன்னதாகவே **premature release** செய்ய வேண்டுமென்று விசாரணை செய்யும்பொழுது, அவருக்கே அது நல்லதல்ல என்று புலப்படுகிறது. அட்வைசரி போர்டு தாராளமாக நடப்பதில்லை என்று சொன்னார்கள். அட்வைசரி போர்டு தாராளமாக சிபார்சு செய்கிறார்கள் என்றுதான் எனக்குப் புலப்படுகிறது. அவர்களுக்கும் சிபாரிசு இருக்கும். அந்த சிபாரிசை வைத்துக்கொண்டு ரொம்பவும் தாராளமாகச் செய்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆயுள் தண்டனை பெறுகிறவர்களுக்கு ரெமிஷன் கொடுக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் பெரோல் கொடுக்க வேண்டுமென்று யோசனை தெரிவிக்கப்பட்டது. அந்த யோசனையைப் பரிசீலனை செய்து, அதை ஏற்றுக் கொள்ளுவது முறையல்ல என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது பெரோல் கொடுப்பதிலே தாராளமாகக் கொடுக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பதில்லை. சிறையிலிருக்கும்பொழுது பெரோலுக்காக நம்மைச் சார்ந்தவர்கள் எவ்வளவு தூரம் முயற்சி செய்தார்கள், அதிலே எவ்வளவு தூரம் ஏமாற்றம் இருந்தது என்பதெல்லாம் தெரியும். அரசியல் கைதிகளாக இருந்தாலும், சில காரணங்களுக்காகத்தான் பெரோலிலே விட முடியும். அவ்வாறு தகுந்த காரணங்கள் இருந்தால் பெரோல் கொடுக்கிறோம். பெரோல் கொடுத்து, அதை நீடிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். வேறு சில காரணங்களுக்காக, பெரோல் கொடுக்கக் கூடாது, அதை நீடிக்கக் கூடாது என்று இருந்தால் ஒழிய, மற்றபடி தாராளமாகப் பெரோல் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாப்பாட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்திலே, **"The proof of the pudding is in the eating"** என்ற ஒரு பழமொழி இருக்கிறது. கனம் திரு. மாதவன் அவர்கள் 'சட்ட மன்ற உறுப்பினர்கள் சிறையைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் யாராயிருந்தாலும், சிறையைச்சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்படும். ஆனால் அவருக்கு வேண்டியவர்கள் சிலர் சிறையில் இருக்கும்பொழுது, அந்த சமயத்தில் அவர்களைப் பார்க்க வேண்டுமென்பதற்காகக் கேட்டார்கள். அதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி இன்டர்வ்யூ செய்யலாம். வழக்கறிஞர் என்ற ஹோதாவில் போய்ப்பார்க்கலாம். அவர்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சொன்ன சமயத்தில்தான் அனுமதி அளிக்கப்படவில்லையே தவிர, பொதுவாக எந்த சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், சிறையைப் பார்ப்பதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

வாரந்தோறும் எடையைக் கணக்கிடுகிறார்கள். பொதுவாக சிறையிலே இருப்பவர்களுக்கு எடை குறைவதில்லை. அப்படிக் குறைந்தால் உடனே கவனிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக சிறையிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படியும் குணமாகவில்லை என்றால், வெளியிலே உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இதெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. சிறையிலே கிடைக்கிற உணவு ருசி இல்லாமல் இருக்கலாம். ஆனால் போதாமல் இருக்கிறது என்று சொன்னால் அதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. கணிசமான அளவு கொடுக்கிறார்கள். கொடுக்கப்படும் உணவு ஆரோக்கியமானது, சுத்தமானது, சத்து நிறைந்தது என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். எனக்கே அப்பேற்பட்ட உணவு வீட்டிலே கிடைப்பதில்லை. (சிரிப்பு). ஏதோ வீட்டிலே கொடுக்கிறார்கள், அதைச் சாப்பிடுகிறோம். ஆனால் சிறையிலே என்னென்ன சத்து இருக்க வேண்டுமென்பதைக் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறார்கள். கைக்குத்தல் அரிசிக்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள். கைக்குத்தல் அரிசி வேதாரண்யத்திலிருந்து திருச்சிக்கு வர வேண்டும் என்பதல்ல. சப்ளை செய்வதற்கு கண்டிராக்டர்கள் இருக்கிறார்கள். கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க வேண்டுமென்று இருக்கிறது. நெல் அறைக்கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி ஆரோக்கியமானது என்ற காரணத்தினால்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், நன்றாக அது அளிந்த பிறகு வடிக்க வேண்டும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [20th March 1963

வேகாமல் இருந்தால்தான் கொஞ்சம் கஷ்டம் ஏற்படும். ஆனுல் மில் அரிசி மாதிரி அதிகமாகச் சாப்பிட்டால் அஜீர்ணம் ஏற்படும். கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதன் காரணமாக எடை ஏறிக்கொண்டு வருகிறது. குறைய வில்லை. ஆனுல், கைக்குத்தல் அரிசியை முதலில் சாப்பிடுகிறவர்களுக்கு அது மருந்து சாப்பிடுவதுபோல் இருக்கும். சாப்பிட்டுப் பழக்கப்பட்டுவிட்டால் அதையே சாப்பிடும்படியாகத் தோன்றும். நான்கு நாட்கள் சாப்பிட்டுப் பழக்கப்பட்டு விட்டால் பிற்பட்டு அதையே தான் சாப்பிடும்படியாகத் தோன்றும். அதன் பிறகு கைக்குத்தல் அரிசி வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். யாருக்கோ உதவி செய்யவேண்டும் என்பதற்காகக் கைக்குத்தல் அரிசியை உபயோகப்படுத்துகிறோம் என்பது இல்லை. கைக் குத்தல் அரிசி நல்லது என்பதற்காகத் தான் அது உபயோகப்படுத்தப் படுகிறது.

இதற்கு முன்பு கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வாங்குவதாகத் தான் இருந்தது. பல பொருள்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்கு வதாகத் தான் இருந்தது. இப்பொழுது அதை மாற்றி விட்டு டெண்டர் முறையில் வாங்குவதாக இருக்கிறது. யார் குறைந்த தொகைக்குக்கொடுக் கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக் கிறது. போட்டி போட்டு யார் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறைந்த விலைக்கு யார் நல்ல பொருளாக சப்ளை செய்கிறார்களோ அவர் களிடமிருந்து வாங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கூட்டு றவு மூலமாக வாங்குவதாக இருந்தாலும், அதை நல்ல முறையில் கண்காணித்துத்தான் வாங்கப்படுகிறது. மார்க்கெட்டு ரேட்டுக்கு யார் குறை வாகக் கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்து தான் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கோவை கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் நடந்துகொண்டு வருகிறது. டெண்டருக்கு விடும்போது யார் குறைந்த விலைக்கு சப்ளை செய்வதாகச் சொல்லுகிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப் படுகிறது. குறைந்த விலைக்கு சப்ளை செய்வதுடன் நல்ல தரமாகவும் இருக்க வேண்டும். அந்த முறையில் கோவை கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் கொடுத்து வருகிறது.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளில் வைத்திய வசதியைப்பற்றிச் சொன் னார்கள். மத்திய சிறைச்சாலையைப் பொறுத்த மட்டில் சுகாதாரம் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. வேண்டிய வசதிகளையும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். டி.எம்.ஓ. அடிக்கடி வரவேண்டும் என்றும், ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது வரவேண்டும் என்றும் சொன்னார்கள். அப்படி வரவேண்டிய அவசியம் இல்லை. எப்பொழுது அவசியம் ஏற்படு கிறதோ அப்பொழுது வந்து கொண்டுதானிருக்கிறார்.

அடுத்தபடியாக, கை தூக்குவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி எங்களுக்கும் தெரியும். நான் கூட கை தூக்கி இருக்கிறேன். தண்டனை அடைந்த பல விதமான கைதிகள் அங்கே இருக்கிறார்கள். சிறையிலுள்ள அதிகாரிகள் தவறு செய்யக்கூடாது என்று இருக்கிறது. இருந்தாலும் சில கைதிகள் சிறையில் முறைக்கிறார்கள். உத்தரவுகளை மறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். இப்படிப் பலவிதமானவர்கள் இருக் கிறார்கள். பலவிதமான தண்டனை அடைந்தவர்கள் இருக்கிறார்கள். இவர் களை யெல்லாம் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆயுள்தண்டனை அடைந்தவர்களும் இருக்கிறார்கள். சிறையை விட்டு வெளியே சென்று விட்டு மறுபடியும் தண்டனை அடைந்து சிறைக்கு வருகிறார்கள். இப்படிப் பட்டவர்களுடன் அதிகாரிகள் பழக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சிலருக்கு சிறையை விட்டுச் சென்றாலும் மறுபடியும் திரும்பி வரவேண் டும் என்ற எண்ணம் இருக்கிறது. இதையெல்லாம் சீர்திருத்தவேண்டிய தாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களில் சிலர் முறைக்கிறார்கள். சரி யானபடி நடந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். இவர்களுக்குக் கடுமை யான தண்டனை விதிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள்மீது கண் டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால்

20th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

சிறையில் கலகம்தான் ஏற்படும். வேண்டிய "டிசிப்ளின்" இருக்காது. சிறைக்கு வருகிறவர்களைச் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும் என்ற அடிப் படையில் இருக்கிறோம். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இல்லை.

அடுத்தபடியாக மருந்து கொடுப்பதைப்பற்றிப் புகார் சொன்னார்கள். அதாவது கார்மினேடிவ் மிக்ஸ்சர்தான் கொடுக்கிறார்கள் என்று. அங் குள்ள கம்பவுண்டர் கார்மினேடிவ் மிக்ஸ்சர்தான் கொடுக்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். சாதாரணமாக சிறையில் இருக்கக் கூடியவர்களுக்கு அதிகப்படியாக சாப்பிட்டு விட்டு அஜீர்ணம்தான் ஏற்படுகிறது. அதனால் தான் கார்மினேடிவ் மிக்ஸசர் கொடுக்கிறார்கள். சில இடங்களில் கம்ப வுண்டர்களே இஞ்செக்ஷன் செய்வதாகக் கூடச் சொல்லுகிறார்கள். ஆனால் இங்கு அப்படி இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயின்ட் ஆ.'.ப் இன்பர்மேஷன், நான் சிறையில் இருக்கும்போது எனக்கு அங்குள்ள கம்பவுண்டர் தான் ஊசி போட்டார்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கு அந்தக் கம்பவுண்டர் மீது நம்பிக்கை இருந்திருக்கும் போலிருக்கிறது. அப்படி நம்பிக்கை இருந்து போட்டுக்கொண்டால் அதைப்பற்றி மகிழ்ச்சிதான். நல்ல பழக்கப்பட்ட கம்பவுண்டர்களும் இருக்கிறார்கள். பல இடங்களில் அப்படிப் பழக்கப்பட்ட கம்பவுண்டர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் கள் ஊசி போடுவதில் தவறு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு ஊசி போடு வதற்கு அனுமதிதான் கொடுக்கப்படுவது இல்லை. அனுமதி யாகக் கொடுக்கக் கூடாது என்பதுதான், ஆனால் ஊசி போடுவதில் தவறு ஒன்றும் இல்லை.

சிறையில் வைத்திய வசதி, மருந்து வசதிகள் இல்லை என்று சொன் னார்கள். வேண்டிய வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அத் துடன் ஹெட்க்வார்டேர்ஸ் ஆஸ்பத்திரிக்குச் சென்றுகூட வைத்தியவசதி யைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக் கின்றன. சிறையில் ஹிந்துக்களுக்கு மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரிலிஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இல்லை என்று சொல்லப்பட்டது. அவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல இடங்களில் மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்ஸுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறையில் நாடகங்கள் நடத்துவது பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது அது நடந்து வருகிறது. சிறையிலேயே நல்ல ஆற்றல் படைத்த அனுபவம் பெற்ற நாடக அறிஞர்கள் இருக்கிறார் கள். அவர்கள் நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். வெகு நாள் அனுபவம் உள்ளவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் நாடகங்களை நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

விலங்கு போடுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறைச்சாலை விதிகளின் படி அதைப் போட வேண்டியதாக இருக்கிறது. ஹைக்கோர்ட்டின் தீர்ப்புப் படிதான் அதைப் போடுகிறார்கள். ஓர் இடத்திலிருந்து வேறு இடங்களுக்குக் கைதிகளை அழைத்துச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது விலங்குகளைப் போட்டு அழைத்துச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஹைக்கோர்டின் தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தப்படிதான் விலங்குகள் போடப்படுகின்றன. ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்குக் கொண்டுபோகும்போதும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும்போதும், கோர்ட்டுகளுக்குக் கொண்டுபோகும்போதும், விலங்குகளைப் போட்டுக்கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. அவர்களைக் கொண்டுபோகக்கூடியவர் களுக்கு இந்தப்பொறுப்பு ஏற்பட்டிருப்பதால் அவர்கள் அவ்வாறு கொண்டு போகிறார்கள். கொண்டுபோகக்கூடியவர்களுடைய பொறுப்பாக இருக்கிற படியால் ஜாக்கிரதையாகக் கொண்டு போகவேண்டும் என்பதற்காகத்தான் விலங்குகளைப் போட்டுக் கொண்டுபோகிறார்கள். எப்பொழுதும் விலங்கைப் போடுவது என்பது இல்லை.

[திரு. எம். பக்தவத்சலம்] [20th March 1963

அடுத்தபடியாக நீதிபரிபாலனத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். நீதி துரிதமாகத் தரப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். காலதாமதம் ஆகிறது என்றும் சொன்னார்கள். மற்ற மாகாணங்களில் நடப்பதைக்காட்டிலும் நமது தமிழ் மாகாணத்தில் வழக்குகள் விரைவில் தீர்க்கப்படுவதைக் கண்டு பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. விசேஷமாக குற்ற விசாரணைகளைப் பொறுத்த மட்டில் ரொம்பவும் துரிதமாக முடிகின்றன. மற்ற சிவில் விவகாரங்களும் அவ்வளவு கால தாமதம் ஆவதில்லை என்றும் சொல்லலாம். நல்ல முறையில் நீதி மன்றங்கள் பணியாற்றி வருகின்றன என்றே சொல்லலாம். ரிட் மனுக்களுக்கு சென்னைக்கு வர வேண்டியதாக இருக்கிறது என்றும், அதனால் ஏழைகளால் இங்கு வர முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். மதுரையிலேயே ரிட் மனுக்களை விசாரிக்க ஹைகோர்டு பெஞ்சு ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஹைகோர்ட்டுக்கு வருவதாக இருந்தால் ஏழைகளுக்குச் செலவாகிறது என்று சொன்னார்கள். அதனால் நீதி சுலபமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். இது ஒரு முக்கியமான பிரச்னை. இதைப்பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருடன் பரிசீலனை செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக வழக்கறிஞர்களும் ஒத்துழைக்க வேண்டியதாக இருக்கிறது. வழக்கறிஞர்கள் ஏழைகளிடமிருந்து குறைவான பீஸ் வாங்கி வழக்குகளை நடத்த முன்வரவேண்டும். வழக்கு அறிஞர்களும் ஏழைகளுக்குச் சலுகை காட்ட முன்வரவேண்டும். இதில் வழக்கறிஞர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் மேற்கொண்டு அரசாங்கம் அதில் அக்கறை செலுத்தும்.

நீதி மன்றங்களில் நடவடிக்கைகள் நடத்தப்படும் மொழியைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் தமிழில்தான் நடைபெறுகின்றன. ஹைகோர்ட்டில் கூட ஆங்கிலத்தில் நடக்க வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவில்லை. வழக்கறிஞர்கள் தமிழில் வாதம் செய்தால் அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. வாதங்கள் முழுவதையும் தமிழில் வாதிக்கலாம். ஹைகோர்டில் ஒரிஜினல் சைட் எங்கும் தமிழில்தான் எல்லா நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. வழக்கறிஞர்கள் வாதங்களைத் தமிழில் நடத்தினாலும், அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. சில வாதங்களில் வழக்கறிஞர்கள் சில நுட்பமான விஷயங்களையும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது ஆங்கிலத்தில் சொன்னால்தான் நலமாக இருக்கும். தமிழில் நடப்பதாக இருந்தாலும் அதை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சாட்சியங்களையெல்லாம் தமிழில் நடத்துகிறார்கள். அவையும் மொழி பெயர்க்கப்படுகின்றன. வழக்கு அறிஞருடைய சாமர்த்தியத்தினால் சில சமயங்களில் சாதாரண கேஸ்களும் வெற்றியடையக்கூடியதாக இருக்கின்றன. நல்ல கேஸ்களும் தோற்றுப்போகக் கூடியதாக இருக்கிறது. அதற்கெல்லாம் காரணம், வாதங்களை எடுத்துச் சொல்லுவதிலும் நீதிபதிக்கு மனதில் பதியும்படியாகச் சொல்வதிலும் தான் இருக்கிறது. வழக்கறிஞர்களுடைய சாமர்த்தியத்தினால் சில சாதாரண கேஸ்களும் வெற்றி பெறக்கூடியதாகப் போய் விடுகின்றன. ஆகவே, மொழியில் ஒன்றும் இல்லை. வாதங்களை எடுத்துச் சொல்வதில் இருக்கிறது. பலவீனமான கேஸாக இருந்தாலும், திறமையாகப் பேசி வெற்றி பெறலாம். சட்ட நுணுக்கங்களைத் திறமையாக எடுத்துச் சொல்ல வேண்டும். கேட்கிற நீதிபதியினுடைய மனதிலே படும்படியாகவும் சொல்லவேண்டும். கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுக்கும் அனுபவம் இருக்கும்—கனம் அங்கத்தினர்களுக்கும் தெரியும். நீதிபதியின் மனதிலே படும்படியாகச் சொல்வது முக்கியம். நீதி மன்றத்தில் தமிழில் பேசுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. தமிழில் பேசலாம். தமிழில் பேசும்போது, சட்ட நுணுக்கத்தை எடுத்துக் கையாண்டு நாம் ஏதோ அர்த்தத்தை வைத்துச் சொன்னால், அது சில சமயங்களில் நீதிபதிக்குப் புரியாமல் போகலாம். சட்டத்தைப் பொறுத்தவரையில், ரொம்ப "ப்ரிஸைஸ்" ஆக இருக்க வேண்டும். ஒருவரும் பாதிக்கப்படக் கூடாது. அதைத்தான் முதலிலே கவனித்துக்கொள்ள வேண்டும். "தமிழில் பேசி வழக்கை நடத்தி

20th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

விட்டேன்" என்று சொல்வது மட்டுமல்ல, வழக்கிலும் வெற்றி பெற வேண்டும். சட்ட இயல் (ஜூரிஸ்ப்ரூடன்ஸ்) பற்றிய ஒரு தமிழ்ப் புத்தகம் நம்முடைய நீதி இலாகாவைச் சேர்ந்தவர் போட்டிருக்கிறார். இம்மாதிரி புத்தகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் போதிய புத்தகங்கள் வரவேண்டும். இந்தியன் பீனல் கோட், ஸிவில் ப்ரொஸீஜர் கோட், ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராபர்டி ஆக்ட், இம்மாதிரி சட்டங்களிலிருந்து செக்ஷன்களை நாம் எடுத்துச்சொல்வது என்பது ஒன்று. அதைப் புரிந்துகொள்ளவேண்டியவர்கள் புரிந்துகொள்ளுகிறார்களா என்றும் பார்க்க வேண்டும். இரண்டும் வேண்டும். இரண்டும் இருந்தால்தான் நீதி தவறாமல் பார்த்துக் கொள்ள முடியும். கட்சிக்காரருக்கும் நன்மை கிடைக்க வேண்டும். அதற்குத் தக்கபடி, எவ்வளவு தூரம் தமிழில் செய்ய முடியுமோ அதைத் தமிழில் செய்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. கிராமக் கோர்ட் (வில்லேஜ் கோர்ட்) பற்றிச் சொல்லப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கோர்ட்களில் தமிழில் நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு அஸ்திவாரமாக **1957**-ம் ஆண்டு நம்முடைய சர்க்கார் ஒரு சட்டச் சொல் அகராதி தயாரிப்பது பற்றி ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. ஏழு ஆண்டுகள் ஆகப்போகின்றன. "கோர்ட்களிலும் சட்டக் கல்லூரியிலும் தமிழைக் கொண்டுவருவதற்கு இந்தச் சட்டச் சொல் அகராதி ஒரு அஸ்திவாரமாக அமையும்" என்று அந்த உத்தரவில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் கழித்துக் கேட்டால், "இன்னும் ஆகவில்லை" என்பார்கள். இப்பொழுது அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழில் இப்போதே சட்டக் கல்லூரியிலும், நீதி மன்றங்களிலும் செய்யலாம் என்று திரு. கணபதியா பிள்ளை அவர்கள் சென்ற ஆண்டு ஓரிடத்தில் குறிப்பிட்டார்கள். அதைக் கொண்டுவருவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டச் சொல் அகராதி தயாரிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு அது நடைபெற்றுக்கொண்டிருந்தது. நான் சமீபத்தில் அதைப்பற்றிக் கவனித்தபோது, வாரத்திற்கு ஒருமுறை அந்தக்குழு கூடி, ஏதோ ஒரு சொல், இரண்டு சொல், மூன்று சொல் முடிவுசெய்துவிட்டு—நான் யாரையும் குறை சொல்லவில்லை—தேநீர் அருந்திவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இது ரொம்பத் தாமதமாகிறது என்றுதான் நான் இப்பொழுது சொன்னேன். சட்ட இயல் ஒரு சிறந்த நூல். நம்முடைய நீதி இலாகா அதிகாரி ஒருவர் அதை ஆக்கியிருக்கிறார் என்று நான் சொன்னேன். அந்த அதிகாரியையே காரிய தரிசியாகப் போட்டு, அவர்கள் முதலில் இதையெல்லாம் தயார் செய்து விடட்டும். டைரக்டர் ஆஃப் லீகல் ஸ்டடீஸ் அவர்கள் சட்டம் நன்கு தெரிந்தவர்கள். தமிழ் தெரிந்தவர். அவரை வைத்துக்கொண்டு இதை முதலில் தயார் செய்துவிடுவோம். அந்த நிலையில் அதைக் குழுவில் வைக்கலாம். அப்பொழுது வேகமாக வேலை நடக்கும் என்று சொல்லி அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். நான் சமீபத்தில் விசாரித்தேன், சட்டச் சொல் அகராதி தயாரிப்பதில் வேகமாக அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று சொன்னார்கள். ரொம்ப அவசரப்பட்டாலும் தகுந்த வார்த்தைகளாகத் தயாரிக்கமுடியாமல் போய்விடும். நான் முன்பே கூறியிருக்கிறேன், நம்முடைய க்ளாஸரியில் கூட, "ஸ்டேஷனரி ஸப்–மாஜிஸ்ட்ரேட்" என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் போடப்படவில்லை என்று, "லிடரல்" ஆகப் போட்டுவிட்டார்கள். இதிலெல்லாம் அவசரப்படவும் கூடாது. ஆக, சட்டச் சொல் அகராதி தயாரிக்கும் வேலையெல்லாம் நடந்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [20th March 1963

கிராமக் கோர்ட் என்னும்போது, பஞ்சாயத்தையே கிராமக் கோர்ட்டாக வைப்பது நல்லதல்ல. இவர்களிடத்தில் நீதி பரிபாலனத்தைக் கொடுப்பது நல்லது அல்ல என்பது இந்த சர்க்காரின் அபிப்பிராயம் ஆகும். பஞ்சாயத்து கோர்ட்டாக இயங்குவது என்கிற அதிகாரத்தைப் பஞ்சாயத்துச் சட்டத்திலேகூட நாம் எடுத்துவிட்டோம். கிராமத்திலே நீதி வழங்குவதற்கு வேறு என்ன வழி என்று கவனிக்க வேண்டியிருக்கிறது. தேர்தல் நடத்தி, அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு நீதி பரிபாலனப் பொறுப்பை ஒப்புவிக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. க. ர. நல்லசிவம் : பஞ்சாயத்து அங்கத்தினர்களை வைத்து பஞ்சாயத்து கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை. முன்பு சில முறைகள் இருந்தனவே, அந்த முறைகளின் அடிப்படையில் . . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்தலில் வந்தவர்களுக்கு இந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். கிராம முன்சீபை விலேஜ் கோர்ட்டாகப் போடலாம் என்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தின் யோசனை.

கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள், "ஹைகோர்ட் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கும்போது, சென்னை நகரத்தில் உள்ள வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள்" என்று கூறினார்கள். வெளியிலே இருக்கும் வழக்கறிஞர்களில் சிலர் ஜில்லா நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முன்பு வெளியிலே வழக்கறிஞர்களாக இருந்து, ஜில்லா நீதிபதிகளாகப் பணியாற்றினவர்கள் ஹைகோர்ட் நீதிபதியாக வரலாம். ஆனால், பொதுவாக வழக்கறிஞர்களை ஹைகோர்ட் நீதிபதியாகப் போடக்கூடாது என்பதில்லை. இங்கிலாந்தில் எடுத்துக்கொண்டால்கூட, உயர் நீதி மன்றங்களுக்கு லண்டனில் இருக்கிறவர்களைத்தான் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். வெளியிடங்களிலே உள்ளவர்களை அவ்வளவாக எடுத்துக்கொள்வதில்லை. அந்த முறைதான் இங்கு கையாளப்படுகிறது. சீஃப் ஜஸ்டிஸ் பரிசீலனை செய்து சிபார்சு செய்யவேண்டும். அவர்கள் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

தங்களுடைய நேரத்தை அதிகமாக நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். "சிறைக்குச் செல்கிறவர்கள் திரும்பி வருவதில்லை" என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் பழைய கதை. ஆஸ்பத்திரிக்குச் செல்கிறவர்கள் திரும்பிவரமாட்டார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் முன்பு இருந்தது. அந்த எண்ணம் இப்பொழுது போய்விட்டது. ஆஸ்பத்திரிகளில் இப்பொழுதெல்லாம் பெரிய கூட்டம் இருப்பதைப் பார்க்கிறோம். எவ்வளவுதான் "பெட்"களை நாம் அதிகமாக்கினாலும், வராண்டாக்களில் கட்டில்கூட இல்லாமல் நோயாளிகள் சிகித்சைக்காக வருவதைப் பார்க்கிறோம். அத்தகைய எண்ணம் இப்பொழுது வந்துவிட்டது. அதுபோல சிறைக்குப்போவது ஒரு நல்ல முறையாகத்தான் இருக்கிறது. சிறையிலே எல்லா வசதிகளும் கொடுக்கவேண்டும், ஹ்யூமன் கன்ஸிடரேஷன் இருக்கவேண்டும் என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. பல வசதிகள் அளிக்கப்படவேண்டியதுதான். அந்தவரையில் வசதிகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக சிறையிலுள்ளவர்களுக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லவிரும்புகிறேன். சிறையே சொர்க்கலோகமாகவும் இருந்துவிடக்கூடாது. அதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன். சொர்க்கலோகமாக இருந்தால் என்ன ஆகும்? இப்பொழுதே கூட, பலருக்கு வீட்டிலே இருக்கிறதைவிட சிறையில் வசதி இருக்கிறது. இருந்தாலும் அதைச் செய்துகொடுக்கிறோம். ஆட்சேபிக்கவில்லை. ஆனால் சிறையே சொர்க்கலோகமாகப் போவது நல்லதல்ல. அப்படியிருந்துவிட்டால் குற்றங்கள் பெருகும். அந்த வரம்புக்கு உட்பட்டு, சிறையிலே உள்ளவர்களுக்கு வசதிகளை அளிக்கவேண்டும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

20th March 1963]

The cut motion of Sri K. R. Nallasivam was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,41,82,800 under Demand No. X—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails be reduced by Rs. 100.

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,51,42,000 under Demand No. XI—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVII—PUBLIC WORKS—WORKS.

DEMAND NO XXVII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works.'

'That the Government be granted a sum not exceeding Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.'

'That the Government be granted a sum not exceeding Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

'That the allotment of Rs. 5,73,66,600 under Demand No. XXVII—Public Works—Works, be reduced by Rs. 100'

SRI SAW GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 1,98,74,100 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

'That the allotment of Rs. 4,68,70,800 under Demand No. XLII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.